[1st November 1958

Pandiya Nad Co-operative Training School, Madurai

* 777 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாண்டிய நாடு கூட்டுறவு பயிற்சிப் பாடசாலையில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?

(ஆ) இவருக்கும் கூட்டுறவு இலாகாவுக்கும் உள்ள தொடர்பு என்ன ?

(இ) ஏதாவதொரு கூட்டுறவு சங்கத்திலாவது இவருக்கு நிர்வாக அனுபவம் உண்டா ?

(ஈ) இந்தப் பதவியின் முடிவுக் காலம் எப்பொழுது ?

(உ) இவரை நியமித்தவர் யார் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Sri P. T. Rajan, M.L.C.

(*b*) & (*c*) Honourable Member are well aware of his qualification and experience, Sir.

(*d*) 27th July 1959.

(*e*) Registrar of Co-operative Societies, Madras.

SRI A. V. P. ASAITHAMBI : ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்புகிறேன். நேற்று ஒரு ஆபீசர் பேரில், கலெக்டர் பேரில் பேசக் கூடாது என்று சொன்னீர்கள். இப்பொழுது ஒரு நபரைப் பற்றி பேசப்படுகிறது. அப்படிப் பேசலாமா ?

MR. SPEAKER : அப்படி நான் சொல்லவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : சொன்னீர்கள். கனம் அங்கத்தினர் திரு. அண்ணாமலை அவர்கள் ஒரு கலெக்டரைப்பற்றிக் கேட்டதற்கு தனிப்பட்ட நபர் பேரில் சொல்லக்கூடாது என்று தாங்கள் சொன்னீர்கள். ஆனால், சற்றுமுன் இங்கே ஒரு ஆள் பேரில் சொல்லப்படுகிறது. இது சரிதானா என்று தங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : ஒரு ஆபீசர் மீது கேள்வி கேட்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆபீசர் மீது கேள்வி கேட்கலாம். அமைச்சர் அதற்குப் பதில் அளிக்கலாம். ஆனால், ஒருவர் மீது குறை சொல்லக் கூடாது. சபை முன்பு உள்ள கேள்வியில் " தலைவராக நியமிக்கப்பட்டவர் யார் ? " என்று கேட்கப்பட்டிருக்கிறது. இது ஒரு ஆபீசரைப்பற்றியதல்ல. இவரைப்பற்றி ஏதாவது குறை கூறிச் சொன்னால், அந்தக் கேள்வியை நிறுத்திவிடுகிறேன். குறை கூறி இதுவரை ஒன்றும் சொல்லவில்லை.

SRI N. R. THIAGARAJAN : பாண்டிய நாடு கூட்டுறவு பாடசாலையின் தலைவராக இருப்பவர், கூட்டுறவு இலாகாவே தன் சட்டைப் பைக்குள் இருக்கிறது என்று டமாரம் அடித்துக்கொண்டிருக்கிறார். இத்தகையவரை தலைவராக நியமிக்கலாமா ? அவரைப் பதவியிலிருந்து நீக்க அரசாங்கம் யோசிக்குமா ?

MR. SPEAKER : I rule this question out of order.

Seed Farms

* 778 *Q.*—SRI A. GOVINDASAMY : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இதுவரையில் நமது சர்க்கார் எத்தனை பொறுக்கு விதைப் பண்ணைகள் அமைத்திருக்கிறார்கள் (மாவட்டவாரியாக) ?

(ஆ) எந்த அடிப்படையில் இந்த விதைப் பண்ணைகள் அமைக்கப் படுகின்றன ?